DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**CC. No. 236 /2024**

**Deposition of LW1 examined as PW1** Dt. 06.05.2025

| | |
|---|---|
| Name | ஸ்ரீதர் |
| Father's/Husband's Name | செல்வம் |
| Village | டி. மணல்மேடு |
| Taluk | |
| Age | 33/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 06.05.2025

(Accused present)

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து உடற்கல்வி ஆசிரியராக வேலை செய்து வருகிறேன். கடந்த 04.09.2023 ம் தேதி மாலை 8, 8.30 மணியளவில் எனது அக்கா மகனா நகனீஷ் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அப்பா அம்மா இருவருக்கும் சண்டை என்றும், அதில் அம்மாவுக்கு அடிபட்டு தலையில் இரத்தம் வருவதாக கூறினார். அதை கேட்ட உடன் அக்கா மகனிடம் ஆட்டோவில் மருத்துவமனைக்கு செல்லுமாறு கூறினேன். நான் வரும் போதே 100 க்கு போன் செய்து, போலீசாருக்கு தகவல் சொன்னேன். வந்த ஆட்டோவை எதிரி திருப்பி அனுப்பிவிட்டதாக அக்கா மகன் மற்றும் ஊர்காரர்கள் கூறினார்கள். அக்கம்பக்கத்தினர் 108 ஆம்புலன்ஸக்கு போன் செய்து வரவழைத்திருந்தார்கள். சம்பவ இடமான எனது அக்கா வீட்டிற்கு வந்து பார்த்த போது எனது அக்கா ஷீலாவை ஆம்புலன்ஸில் ஏற்றினார்கள். நான் பார்த்த போது எனது அக்கா ஷீலா சுயநினைவில் இல்லை. ஆம்புலன்ஸில் அக்கா ஷீலாவுடன் ராஜலட்சுமி உடன் சென்றார். நான் இருசக்கர வாகனத்தில் மருத்துவமனைக்கு சென்றேன். நான் சம்பவ இடமான எனது அக்கா ஷீலா வீட்டிற்கு பார்க்க சென்ற போது எதிரி கல்யாண சுந்தரம் வீட்டில் இருந்த கம்பியையோ அல்லது கட்டையையோ சரியாக நினைவில் இல்லை அதனை வைத்து எங்களை கொலை செய்து விடுவதாக மிரட்டினார். மருத்துவமனையில் எனது அக்காவிற்கு முன்தலையில் 6 தையலும், பின்தலையில் 8 தையலும், இடது உள்ளங்கை கிழிந்து இருந்தது மற்றும் வலது கையில் எலும்பு முறிவும் அடிவயிற்று பகுதியில் ரத்த கட்டும் ஏற்பட்டு இருந்தது. மேற்கண்ட காயங்கள் எதிரி கல்யாணசுந்தரம் எனது அக்கா ஷீலாவை கட்டையால் அடித்து ஏற்பட்டது என்று உடன் இருந்த அப்பா செல்வம் ,ராஜலட்சுமி, பாலு மற்றும் ஊர்காரர்கள் கூறினார்கள். எனது அக்கா ஷீலா மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக 22 நாட்கள் சிகிச்சை எடுத்து கொண்டார்கள். வலது கையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு பிளேட் பொருத்தப்பட்டது. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

S. [signature]

[signature] 6/5/25